திரு. நா. வீராசாமி: இப்போது 777 பேரைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக் கொண்டதாக அறிவித்தார்கள். அப்படி எடுத்துக் கொள்ளப்பட்ட தொழிலாளர்கள் சீனியாரிடிபடி எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தொழிலாளர்கள் போராடு கிறார்கள். சீனியாரிட்படி, அதிகம் சர்விஸ் பெற்றவர் என்ற அடிப்படையில் அவர்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் குறைபாடு ஆரம்பத்தில் இருந்தது. ஐந்தாறு தொழிலாளர்கள் சீனியாரிடிபடி எடுக்கப்படவில்லை என்ற குறைபாட்டைத் தெரிவித்தவுடன் அரசு சார்பாக மானேஜ் மென்ட்டை அழைத்து இது போன்ற தவறுகள் நடக்கக்கூடாது, ஒப்பந்தப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது வலியுறுத்தப் பட்டது. அதற்குப் பிறகு இதுவரை அப்பேர்ப்பட்ட குறைபாடு கள் ஏற்படவில்லை.

திரு. ஏ. எம். இராஜா: இந்த ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனிக்காரர்கள் வங்கியின் உதவி கேட்டிருப்பதாகவும், அந்த உதவி கிடைக்கவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அவர்கள் எவ்வளவு நிதி உதவி கேட்டிருக்கிறார்கள்? அந்த நிதி உதவி கிடைத்தால் இன்னும் எவ்வளவு பேரை அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்வார்கள்? அதற்கு கண்டிஷன்ஸ் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: முதலாவதாக அங்கு 1,481 பேர் வேலை செய்து வந்தார்கள். அதிலே 777 பேர் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். அதிலே 757 பேர் தொழிலாளர்கள், 20 பேர் ஆபீசர்கள் நிதி உதவி கிடைத்த பிறகு விரிவான அளவுக்குத் தொழில் நடக்கத் தொடங்கியவுடன் மற்றத் தொழிலாளர்களும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

Report of Elayaperumal Committee on Untouchability

* 375 Q.—Thiru S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(a) whether Central Government has sent any copy of the report of the Elayaperumal Committee on Untouchability; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:

(அ) ஆம்.

(இ) அறிக்கையின் விபரங்கள் பின்வருமாறு:—

இந்த அறிக்கையின் விபரங்களை கீழ்க்கண்ட நான்கு தலைப்பு களின்கீழ் வகைப்படுத்தலாம்.

பகுதி 1 தீண்டாமை

1971 ஜூலை 22]

பகுதி 2 பொருளாதார முன்னேற்றம்.

பகுதி 3 கல்வி.

பகுதி 4 வேலை வாய்ப்பு.

மேலே கண்ட நான்கு பிரிவுகளிலும் மொத்தம் 186 சிபார்சுகள் உள்ளன. சிபார்சுகள் அனைத்தையும் அரசு நன்கு பரிசீலித்து அவைகளின் பேரில் முடிவு எடுத்துள்ளது. மத்திய அரசு சம்பந்தப்பட்ட வரை உள்ள சிபார்சுகளில் எடுத்த முடிவை அவ்வரசுக்கு தனியாக அறிவிக்கப்படும். மிருதியுள்ள சிபார்சுகள்ன் பேரில் எடுத்துள்ள முடிவுகளை செயல்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் இரண்டு பிரதிகள் இப்பேரவையின் நூலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

DR. H. V. HANDE : Sir, it is quite a long time since the report was submitted. After the submission of the report, are the Government having any intention to see that the person who practises untouchability would be punishable under the law. May I know whether the Government have got any proposal to bring forward such an enactment so that there will be greater security for the persons who are now considered as untouchables?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அந்தச் சிபாரிசில் பல்வேறு விஷயங்களைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். அதை நமது அரசாங்கம் பரிசிலனை செய்தது. அதற்காக தனி மசோதா கொண்டுவர உத்தேசம் இல்லை. தீண்டாமைக் கொடுமை அனுஷ்டிக்கப்படுகின்ற நேரத்தில் நடவடிக்கை எடுத்து கடுமை யான தண்டனை கொடுக்கப்படுகிறது. சிபாரிசுகளில் சிலவற்றை நம்முடைய மாநில அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது என்று மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம் : இந்தக் கமிட்டிகள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன? தாலுகா அடிப்படையிலா அல்லது மாவட்ட அடிப்படையிலா? இதற்காக அமைக்கப் படுகின்ற கமிட்டிகளிலே அங்கம் வகிப்பவர்கள் யார் யார்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் அடுத்த கேள்விக்கான பதிலை இப்போது கேட்கிறார்கள் போல் இருக்கிறது. இந்தக் கமிட்டி மத்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கமிட்டி. அதிலே மாநிலத்திலே இருப்பவர்களும் சிலர் பங்கு பெற்றிருக்கிறார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இளையபெருமாள் தலைமையில் நடந்த இந்தக் கமிட்டி எத்தனை ஆண்டுகள் பரிசீலித்து இந்த அறிக்கையை எப்போது சமர்ப்பித்தது? இதைப் பற்றி எப்போது மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஏறத்தாழ 1965-ம் ஆண்டு இந்தக் குழு நிறுவப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை 1969-ம் ஆண்டில் தரப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டில்

நமது மாநில அரசு அதைப் பற்றிப் பரிசீலனை செய்தது. இப்போது அதிலே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவற்றைப் பற்றி முடிவு செய்திருக்கிறோம்.

தீண்டாமை ஒழிப்பு

* 376 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்பினை தீவிரப்படுத்த தாலுக்கா அளவில் அரிசன நலக் குழுக்கள் அமைக்கத் திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம்.

திரு. என் கிட்டப்பா: அத்தகைய குழுக்களில் எந்தெந்தத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர்கள் பங்கு கொள்ள வகை செய்யப்பட்டிருக்கிறது? அந்தக் குழுவின் நடைமுறை வேலைத் திட்டத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஒவ்வொரு பிர்க்காவிலும் ஒருவரைத் தேர்ந்தெடுத்து தாலுகா வாரியத்திற்கு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளவும், போலீஸ் அதிகாரிகள் சிலரைச் சேர்த்துக் கொள்ளவும், அப்படி தீண்டாமை ஒழிப்பில் அக்கறையுள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தாலுகா வாரியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து மாவட்ட வாரியத்தை அமைக்கவும், மாவட்ட வாரியத்தில் உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து மாநில அளவில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும் வகை செய்து திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. தாலுகா குழுவில் இருப்பவர்கள் சார்பிலே அவர்கள் புகார்களை எடுத்துச் சொன்னாலும், அதைப் பற்றியும் விசாரணை செய்து உண்மைதானா என்று பார்த்து உண்மை என்று ஒத்துக்கொண்ட பிறகு அதை மேலே இருக்கும் குழுவுக்கு அனுப்புவார்கள். போலீசாரும் தகவல் கொடுப்பார்கள். போலீசாரும் நல்ல முறையில் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதற்கு இந்தக் குழு தன்னிச்சையாகச் சிபாரிசு செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சரியாகச் செயல் படவில்லை என்று சொன்னால், மாநிலக் குழுவுக்கு அவர்கள் தெரிவிப்பார்கள். மாநில வாரியத்திற்கு நலத்துறை அமைச்சர் தலைவராக இருக்கிறார்கள்; ஐ.ஜி. அவர்கள் பொறுப்பாளராக இருக்கிறார்கள். சமூக நலத் துறைச் செயலாளர் அவர்கள் செயலாளராக இருக்கிறார்கள். ஆகவே, மேல் மட்டத்தில் இருக்கும் மாநிலக் குழுவில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்பு பற்றி மக்களிடையே பிரசாரம் செய்ய செய்திப் படம் தயாரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.